## பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு

### குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் வெளிக்கள/ அலுவலக முறைப்பட்ட – தொகுதி 2 சேவை வகுதியைச் சேர்ந்த அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2025

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் வெளிக்கள/ அலுவலக முறைப்பட்ட – தொகுதி 2 சேவை வகுதியைச் சேர்ந்த அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை 2025 யூலை மாதம் நடாத்தப்படும் என்பது இத்தால் அறியத்தரப்படுகின்றது.

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பத்தை இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் www.donets.lk இணையத்தளத்தில் “Our Services” இன் கீழுள்ள “Online Applications – Recruitment Exams / E.B. Exams” ஊடாக வெளியிடப்பட்டுள்ளதோடு, விண்ணப்பங்களை இணையவழி (Online) மூலம் மாத்திரமே சமர்ப்பிக்க முடியும். இணைய வழியில் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கை 2025, ஏப்பிறல் மாதம் 07 ஆம் திகதி மு.ப. 9.00 மணிக்கு திறக்கப்படும் 2025, மே மாதம் 05 ஆம் திகதி இரவு 9.00 மணிக்கு முடிவடையும்.

உத்தியோகத்தர்கள் விண்ணப்பத்தின் பிரதியொன்றை தனது சுயவிபரக் கோவையில் உள்ளடக்குவதற்காக நிறுவனத் தலைவரிடம் ஒப்படைத்தல் வேண்டுமென்பதோடு, நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் போது நிறுவனத் தலைவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றையும் சேவையை உறுதிப்படுத்தும் கடிதமொன்றையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

1. இந்த அறிவித்தலில் “திணைக்களத் தலைவர்” எனும் பதம் குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் எனப் பொருள்படும். இந்தப் பரீட்சை மூலம், குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதுடன், வேறு விதத்தில் விசேடமாகக் குறிப்பிடப்படாத சந்தர்ப்பங்களில் “பதவி” எனும் பதம் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் தரம் II எனப் பொருள்படும்.

2. இப்பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் கடைசித் திகதி 2025.05.05 ஆகும்.

2.1 **எழுத்து மூலப் பரீட்சை** : இப்பரீட்சை கீழுள்ளவாறு மூன்று (03) வினாத் தாள்களைக் கொண்டதாகும்.

i. நுண்ணறிவு மற்றும் பொது அறிவு
ii. ஆங்கில மொழி.
iii. கணினி விஞ்ஞானம் தொடர்பான அடிப்படை அறிவு.

2.2 **பரீட்சைத் திகதி** : இந்தப் பரீட்சை 2025, யூலை மாதம் கொழும்பில் நடைபெறும். இப் பரீட்சையை ஒத்திவைக்கும் அல்லது இரத்துச் செய்யும் அதிகாரம் குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு உண்டு.

2.3 **நேர்முகப் பரீட்சை** :

i. நிலவும் வெற்றிடங்களுள் 10% வீதம் மாத்திரம் பெண் விண்ணப்பதாரிகளுக்காக ஒதுக்கப்படும்.

ii. குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் நியமிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சைச் சபையினால், எழுத்து மூலப் பரீட்சைக்குத் தோற்றி, ஒவ்வொரு வினாத்தாளுக்கும் ஆகக் குறைந்தது 40% வீத புள்ளிகளை அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரிகளில் இருந்து நிலவும் வெற்றிடங்களுக்குச் சமனான எண்ணிக்கையினர் மேலே i இல் காட்டப்பட்ட அடிப்படைக்கு அமைவாக “ஆகக் கூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட” விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். (இந்த நேர்முகப் பரீட்சை தகைமைகளைப் பரீட்சிப்பதற்காக மாத்திரம் நடாத்தப்படும்).

iii. நேர்முகப் பரீட்சையின் போது கீழே இல. 6.3 இன் கீழ் காட்டப்பட்டுள்ள உடற் தகைமைகள் பரீட்சிக்கப்படும்.

3. இப் பதவிக்கு நியமிக்கப்படுகின்ற பதவிகளின் எண்ணிக்கை நாற்பத்தைந்து (45) ஆகும். இறுதியாக நிலவும் வெற்றிடத்திற்கு அல்லது சில வெற்றிடங்களுக்கு சமமான புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகள் நிலவும் வெற்றிடங்களையும் விட கூடுதலாக இருக்கும் சந்தர்ப்பத்தில், அந்த வெற்றிடத்தை/ வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பில் குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் இறுதி முடிவு எடுக்கப்படும் என்பதுடன், இந்த ஆட்சேர்ப்புகளில் நியமனம் அமுலுக்கு வரும் திகதியும் குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும்.

4. **சேவை நிபந்தனைகள்**:

4.1 அரசாங்க சேவை நியமனங்களுக்குரிய பொது நிபந்தனைகளுக்கும், தாபனவிதிக் கோவை ஏற்பாடுகளுக்கும், நிதிப் பிரமாணங்களுக்கும், 2022.12.14 ஆம் திகதிய 2310/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும், 2013.12.20 ஆம் திகதியுடையதாக அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் வெளிக்கள / அலுவலக முறைப்பட்ட – தொகுதி 2 சேவை வகுதியைச் சேர்ந்த அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் தரம் II பதவிக்குரிய ஆட்சேர்ப்புத் திட்டத்திலுள்ள நியதிகளுக்கும், நிபந்தனைகளுக்கும், அந்த ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்களுக்கும் கட்டுப்பட்டு, தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகள் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் தரம் II பதவிக்கு நியமிக்கப்படுவர்.

4.2 இந்தப் பதவி நிரந்தரமானதும், ஓய்வூதிய உரித்துடையதுமாகும். புதிய நியமனதாரிகளுக்கான ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் அரசாங்கத்தினால் இனிவரும் காலங்களில் எடுக்கப்படுகின்ற கொள்கைத் தீர்மானங்களுக்கு நியமனதாரிகள் கட்டுப்படுதல் வேண்டும்.

4.3 இந் நியமனம் ஒரு (01) வருட பதில் கடமை காலத்திற்கு உட்படுத்தப்படுவர். அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் தரம் II பதவிக்கு நியமிக்கப்பட்டு மூன்று (03) வருட காலப்பகுதிக்குள், ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியெய்துதல் வேண்டும்.

4.4 01/2014 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையினதும், அதனுடன் இணைந்த சுற்றறிக்கைகளினதும் பிரகாரம், சேவையில் இணைந்து 05 வருட காலப்பகுதிக்குள் உரிய மட்டத்திற்குரிய அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

5. **இப் பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம்**:

2025.03.25 ஆம் திகதிய 10/2025 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் அட்டவணை I இற்கு அமைய இப்பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத் திட்டம், ரூ. 58,660 – 10x 1190 – 11x 1360 – 15x1670- ரூ.110,570 (MN-5/2025). அச்சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய, அதன் அட்டவணை II இற்கு அமையவே சம்பளம் வழங்கப்படும். இதற்கு மேலதிகமாக அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் வழங்கப்படுகின்ற பிற கொடுப்பனவுகளும் இந்த உத்தியோகத்தர்களுக்கும் உரித்தாகும்.

6. **ஆட்சேர்ப்புக்கான தகைமைகள்**:

6.1

i. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
ii. சிறந்த நல்லொழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்.
iii. தீவின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும், இந்தப் பதவியில் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல், உள ரீதியான தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**6.2 கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம்:**

I. க.பொ.த. (சா.த.) பரீட்சையில் கணிதம், ஆங்கிலம், சிங்களம் / தமிழ் மொழி ஆகிய பாடங்கள் உட்பட ஆகக் குறைந்தது நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

க.பொ.த. (உ.த.) பரீட்சையில் ஆகக் குறைந்தது ஒரு (01) பாடத்தில் (சாதாரண பொதுப் பரீட்சை நீங்கலாக) சித்தியடைந்திருத்தல்.

அத்துடன்

தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டிய இறுதித் திகதிக்கு அரசாங்க சேவையில்/ மாகாண அரசாங்க சேவையில், நிரந்தரமானதும், ஓய்வூதிய உரித்துடையதுமான MN-1/2025 அல்லது அதற்கு மேற்பட்ட சம்பள அளவுத் திட்டத்தையுடைய பதவியொன்றில் பத்து (10) வருடங்களுக்குக் குறையாத செயலூக்கமிக்க சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பட்டம் வழங்குவதற்கான நிறுவனமொன்றாக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

மற்றும்

தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டிய கடைசித் திகதிக்கு அரசாங்க சேவையில்/ மாகாண அரச சேவையில், நிரந்தரமானதும், ஓய்வூதிய உரித்துடையதுமான MN-1/2025 அல்லது அதற்கு மேற்பட்ட சம்பள அளவுத் திட்டத்தையுடைய பதவியொன்றில் ஐந்து (05) வருடங்களுக்குக் குறையாத செயலூக்கமிக்க சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

குறிப்பு: i. பட்டம் செல்லுபடியாகும் திகதியும் க.பொ.த. சாதாரண தர / உயர் தரப் பரீட்சைகளில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள உத்தேச சித்திகளைப் பெற்றுக் கொண்ட திகதியும், தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டிய கடைசித் திகதியான 2025.05.05 அல்லது அதற்கு முந்திய திகதியாக இருத்தல் வேண்டும்.

ii. மேற்படி சேவைக் காலத்தைக் கணக்கிடும் போது அரசாங்க சேவையில் மற்றும் / அல்லது மாகாண அரசாங்க சேவையில் ஏற்புடைய மற்றும் தொடர்ச்சியான சேவைக் காலம் ஏற்றுக்கொள்ளப்படும்.

6.3 **உடற் தகைமைகள்**:

i. விண்ணப்பதாரிகளின் உயரம் ஆகக் குறைந்தது 5 அடி 4 அங்குலம் (162.5 செ.மீ.) ஆகவும், மார்புச் சுற்றளவு 32 அங்குலம் (81.25 செ.மீ.) ஆகவும் இருத்தல் வேண்டும்.

ii. பெண் விண்ணப்பதாரிகளின் உயரம் ஆகக் குறைந்தது 5 அடி 2 அங்குலம் (156 செ.மீ.) ஆக இருத்தல் வேண்டும்.

6.4 **வயதெல்லை**:

தற்போது அரசாங்க சேவையில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் என்றபடியால் வயதெல்லை ஏற்புடையதாகாது.

7. **பரீட்சைக் கட்டணம்:**

பரீட்சைக் கட்டணம் ரூபா அறுநூறு (ரூ. 600.00) ஆகும். பரீட்சைக் கட்டணங்களை செலுத்தும் போது இணையவழி முறைமையினூடாக வழங்கப்படும் பின்வரும் கட்டண முறையின் கீழ் மாத்திரம் கட்டணங்களை செலுத்துதல் வேண்டும்.

I. எந்தவொரு வங்கிக் கடன் அட்டை மூலமும் (Any Bank Credit Card )
II. இணையவழி வசதியுள்ள எந்தவொரு வங்கிப் பற்று அட்டை மூலமும் (Any Bank Debit Card with the Facility of Internet Transactions)
III. இலங்கை வங்கியின் இணையவழி வங்கி முறை மூலம் (Online Banking Method of Bank of Ceylon)
IV. எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையின் ஊடாகவும் (Any Branch of the Bank of Ceylon)

குறிப்பு :

(அ) மேற்குறிப்பிடப்பட்ட முறைகளைப் பயன்படுத்தி பணம் செலுத்துவது எவ்வாறு என்பது பற்றிய அறிவுறுத்தல்கள், பரீட்சைத் தொடர்பான தொழில்நுட்ப அறிவுறுத்தல்களின் கீழ் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

(ஆ) பணம் செலுத்தப்பட்டதற்கான குறுஞ்செய்தி (SMS) அல்லது மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத்தின் முழுத் தொகையையும் செலுத்துதல் வேண்டும். பரீட்சைக் கட்டணத்தை விடக் குறைவாகவோ அல்லது அதிகமாகவோ செலுத்தப்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற்குறிப்பிடப்பட்ட கட்டண முறைகள் மூலம் பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்தும்போது ஏற்படும் எந்தவொரு பிழைகளுக்கும் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பொறுப்பல்ல.

(இ) பரீட்சைக்காக செலுத்தப்பட்ட தொகை எக்காரணம் கொண்டும் மீளளிக்கப்படவோ அல்லது வேறு பரீட்சையொன்றுக்கு மாற்றப்படவோ மாட்டாது.

**8. விண்ணப்பிக்கும் முறை:**

8.1 இணையவழி (Online) பரீட்சை விண்ணப்பம் ஆங்கிலத்தில் மட்டுமே நிரப்பப்படல் வேண்டும். இணைய வழியில் சமர்ப்பிக்கப்பட்ட மென் பிரதி செல்லுபடியாகும் விண்ணப்பமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது / ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதை, முறைமையில் பிரவேசிக்கப் பயன்படுத்தப்பட்ட கையடக்க தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ்செய்தி (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் (E-mail) முகவரி ஊடாக விண்ணப்பதாரிக்கு திணைக்களத்தினால் அறிவிக்கப்படும். இணையவழி விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதற்கு முன்னர், பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான அறிவுறுத்தல்களைப் (Instructions) பதிவிறக்கம் செய்யவும். விண்ணப்பத்தை நிரப்பும்போது அந்த அறிவுறுத்தல்களை கவனமாகப் பின்பற்றவும். அச்சிடப்பட்ட நகலைப் பெற்ற பின்னர் விண்ணப்பத்தில் செய்யப்படும் எந்தவொரு திருத்தமும் செல்லுபடியான திருத்தமாகக் கருதப்படமாட்டாது. முழுமையற்ற விண்ணப்பங்கள் முன்னறிவிப்பின்றி நிராகரிக்கப்படும்.

8.2 பரீட்சைக்காக விண்ணப்பிக்கும்போது காணப்பட்ட விண்ணப்பதாரியின் பதவி மற்றும் சேவை நிலையம் பரீட்சைக்கான அனைத்து விடயங்களுக்கும் ஏற்புடையதாகும். விண்ணப்பத்தை அனுப்பிய பின்னர் அது தொடர்பில் நிகழும் மாற்றங்கள் குறித்து பரிசீலிக்கப்படமாட்டாது.

8.3 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் மட்டும் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற ஊகத்தின் அடிப்படையில், எல்லா விதத்திலும் பரிபூரணமான விண்ணப்பங்களை அனுப்பிய விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்படும். பரீட்சை அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டவுடன் அதனை அறிவிக்கும் வகையில், பரீட்சைகள் திணைக்களத்தினால் இணைய அறிவித்தலொன்று பிரசுரிக்கப்படும். அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாதவிடத்து அந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அதனை அறிவித்தல் வேண்டும். இவ்வாறு அறிவிக்கும் போது, விண்ணப்பதாரி தாம் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், முகவரி ஆகிய விபரங்களை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியே வசிப்பிடத்தைக் கொண்டவராக இருப்பின், தொலைநகல் மூலம் பரீட்சை அனுமதி அட்டையின் பிரதியொன்றை அனுப்புவதற்கு வசதியாக, மேற்சொன்ன விபரங்களுடன் தொலைநகல் இலக்கமொன்றையும் குறிப்பிட்டு, தமது கோரிக்கைக் கடிதத்தை குறித்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்தினூடாக பரீட்சைகள் திணைக்களத்திற்கு அனுப்புவதன் மூலம் விசாரிப்பது சாலச் சிறந்ததாக அமையும். மேலும், பரீட்சைகள் திணைக்களத்தினால் கேட்கப்படுகின்ற ஏதேனும் விடயமொன்றை உறுதிப்படுத்தும் வகையில், விண்ணப்பதாரி ஏற்கனவே தம்வசம் வைத்துக் கொண்ட விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டின் நிழற்படப் பிரதி என்பவற்றைத் தயார் நிலையில் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்.

9. **பரீட்சைக்குத் தோற்றுதல்:**

9.1 பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதி அட்டை விநியோகிக்கப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு மட்டும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படும். பரீட்சைத் தினத்தன்று பரீட்சை அனுமதி அட்டையை சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைக்குத் தோற்ற அனுமதி வழங்கப்பட மாட்டாது.

9.2 பரீட்சார்த்திகள், தமக்கு விதிக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சைக்குத் தோற்ற வேண்டும் என்பதுடன், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தமது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பரீட்சை அனுமதி அட்டையை, குறித்த பரீட்சை மண்டபத்தின் பரீட்சை மேற்பார்வையாளரிடம் முதலாவது நாளிலேயே கையளித்தல் வேண்டும். அனைத்து பரீட்சார்த்திகளும் பின்பற்றியொழுக வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும் இந்த வர்த்தமானியின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

குறிப்பு: பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சை அனுமதி அட்டையொன்றை விநியோகிப்பதானது, அப்பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றுவதற்கும், பதவியொன்றை வகிப்பதற்கும் தேவையான எல்லாத் தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளார் என்பதை ஏற்றுக்கொண்டதாக அமைய மாட்டாது.

10. **பரீட்சார்த்தியின் ஆள் அடையாளம்**:

பரீட்சார்த்தியானவர் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்திப்படும் வகையில் தமது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும் என்பதுடன், இதற்காக பின்வரும் ஆவணங்களுள் ஏதேனும் ஒன்று ஏற்றுக் கொள்ளப்படும் :

i. தேசிய ஆளடையாள அட்டை ;
ii. செல்லுபடியான கடவுச்சீட்டு ;
iii. செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்

மேலும், பரீட்சைக்குத் தோற்றுபவர்கள் முகத்தை மறைக்காமலும், இலத்திரனியல் தொடர்பு சாதனங்களை அணிந்திருக்கவில்லை என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள முடியுமான விதத்தில் இரண்டு காதுகளையும் மூடாத வண்ணம் பரீட்சை மண்டபத்திற்குள் நுழைதல் வேண்டும். அவ்வாறு தனது அடையாளத்தை நிரூபிக்க மறுக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்திற்குள் நுழைந்ததிலிருந்து பரீட்சை முடிவடைந்து வெளியேறும் வரை,முகத்தையும் இரண்டு காதுகளையும் மறைக்கக் கூடாது.

11. **பொய்யான தகவல்களை வழங்குவதற்கான தண்டனைகள் :**

விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்தும் போது மிகக் கவனமாக கவனம் செலுத்தி மிகச் சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். இந்தப் பரீட்சையின் சட்ட திட்டங்களுக்கு அமைய எவரேனும் பரீட்சார்த்தியொருவர் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்யவில்லை எனத் தெரிய வரும் பட்சத்தில், பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சைக்குப் பின்னரோ ஆகிய எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அப்பரீட்சார்த்தியின் பரீட்சார்த்த தகைமை இரத்துச் செய்யப்படும்.

12. இவ் அறிவித்தல் மூலம் ஏற்பாடு செய்யப்படாத ஏதேனும் விடயங்கள் தொடர்பில் குடிவரவு மற்றும் குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படுகின்றவாறு நடவடிக்கை எடுக்கப்படும்.

13. **பரீட்சையை நடாத்துதல்:**

13.1 இப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் நடாத்தப்படும்.

13.2 பரீட்சார்த்தி தகைமை பெற்ற பட்டத்தைப் பெற்றுக் கொண்ட மொழியில் அல்லது ஏதேனுமொரு அரசகரும மொழியிலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

13.3 பரீட்சார்த்தி தகைமை பெற்ற பட்டத்தின் பாடங்களை, இரண்டு மொழிகளில் அல்லது அதற்குக் கூடிய மொழிகளில் சித்தியெய்தி இருப்பின், அப்பட்டத்தில் அப்பரீட்சார்த்தி சித்தியெய்திய பாடங்களுள் கூடிய பாடங்களுக்குத் தோற்றிய மொழியில் அல்லது ஏதேனுமொரு அரசகரும மொழியிலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

13.4 பிரதான பாடம் ஒரு மொழியிலும், மேலதிக பாடம் மற்றொரு மொழியிலும் சித்தியெய்தியுள்ள விசேட பட்டமொன்றைப் பெற்றுள்ள பரீட்சார்த்தியொருவர், பிரதான பாடத்தில் சித்தியெய்திய மொழியில் அல்லது ஏதேனுமொரு அரசகரும மொழியிலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

குறிப்பு:

i. மேலே பந்தி 13.2 மற்றும் 13.3 இல் குறிப்பிடப்பட்டுள்ள "தகைமை பெற்ற பட்டம்" எனும் பதம் பந்தி 6.2 இன் (ii) இல் குறிப்பிடப்பட்ட பட்டத் தகைமையாகும்.
ii. பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றும் ஆங்கிலப் பாட வினாத்தாள் தவிர்ந்த நுண்ணறிவு மற்றும் பொது அறிவு மற்றும் கணினி விஞ்ஞானம் பற்றிய அடிப்படை அறிவு ஆகிய இரண்டு வினாத்தாள்களுக்கும் ஒரே மொழியில் விடை அளித்தல் வேண்டும்.
iii. தனது விண்ணப்பத்தில் குறிப்பிட்ட பரீட்சை மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு பரீட்சார்த்திக்கு இடமளிக்கப்பட மாட்டாது.

14. **ஆட்சேர்ப்பு நடைமுறை:**

14.1 **எழுத்துமூலப் பரீட்சை**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களைக் கொண்ட மூன்று (03) வினாத்தாள்களைக் கொண்ட எழுத்துமூலப் பரீட்சை நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் எல்லாப் பாடங்களுக்கும் தோற்றுதல் வேண்டும். அந்தப் பாடங்கள் மற்றும் ஒவ்வொரு பாடத்திலும் சித்தியெய்துவதற்காகப் பெற்றுக் கொள்ள வேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகளும் பின்வருமாறு:

| *பாட இல.* | *பாடம்* | *மொத்தப் புள்ளிகள்* | *சித்தியெய்துவதற்காகப் பெற்றுக் கொள்ள வேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகள்* | *காலம் (மணித்தியாலங்கள்)* |
|---|---|---|---|---|
| 01 | நுண்ணறிவு மற்றும் பொது அறிவு | 100 | 40 | 2 |
| 02 | ஆங்கில மொழி | 100 | 40 | 2 |
| 03 | கணினி விஞ்ஞானம் தொடர்பான அடிப்படை அறிவு | 100 | 40 | 1 |

* பாட இலக்கம் 01 நுண்ணறிவு மற்றும் பொது அறிவுக்கு காலம் 01 மணித்தியாலம் வீதம் இரண்டு வினாப்பத்திரங்களைக் கொண்டிருக்கும்.

14.2 **பொதுவான நேர்முகப் பரீட்சை :**

i. மேலே பந்தி 6 இல் குறிப்பிட்டுள்ள ஆட்சேர்ப்பு செய்வதற்கான தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என்பதைப் பரீட்சிப்பதற்காக பொதுவான நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். இந்த பொதுவான நேர்முகப் பரீட்சைச் சபை திணைக்களத் தலைவரினால் நியமிக்கப்படும்.

ii. ஒவ்வொரு பாடத்திற்கும் ஆகக் குறைந்தது நாற்பது (40%) அல்லது அதற்குக் கூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட பரீட்சார்த்திகளுள், எல்லாப் பாடங்களுக்கும் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் கூட்டுத் தொகைக்கு அமைய, ஆகக் கூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரிகள்

பொதுவான நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதி பெறுகின்றனர். இவ்வாறு தகைமை பெற்ற விண்ணப்பதாரிகளுள், எழுத்து மூலப் பரீட்சையில் அவர்கள் பெற்றுக் கொண்ட மொத்தப் புள்ளிகளின் திறமை ஒழுங்குவரிசைப்படி, ஆட்சேர்ப்புச் செய்யப்படவுள்ள எண்ணிக்கைக்குச் சமமான விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். ஆட்சேர்ப்புச் செய்யப்படவுள்ள எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கையிலான விண்ணப்பதாரிகள் இல்லாத சந்தர்ப்பத்தில், நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமைப் பெற்ற விண்ணப்பதாரிகள் மாத்திரம் அழைக்கப்படுவர்.

**கவனத்திற்கொள்க** : நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதானது, நியமனம் வழங்குவதற்கான தகைமையைப் பூர்த்தி செய்வதாக கருதப்பட மாட்டாது.

14.3 வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைய, எல்லாத் தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் எழுத்து மூலப் பரீட்சையில் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் அடிப்படையில் ஆகக் கூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரி தொடக்கம் திறமை ஒழுங்கில் இப்பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

14.4 **பரீட்சைப் பெறுபேறுகள் :**

இவ் வர்த்தமானி அறிவித்தலில் பந்தி 14.1 இல் காட்டப்பட்டுள்ளவாறு, பரீட்சார்த்திகள் எழுத்து மூலப் பரீட்சையில் பெற்றுக் கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட பரீட்சைப் பெறுபேற்று அட்டவணை குடிவரவு மற்றும் குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் நாயகத்திடம் வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றிய எல்லாப் பரீட்சார்த்திகளுக்கும் பரீட்சைப் பெறுபேறுகள் தனிப்பட்ட முறையில் அனுப்புதல் அல்லது www.results.exams.gov.lk எனும் இணையத்தளத்தில் பகிரங்கப்படுத்தப்படும். பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்ட திட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டுள்ளனர். அந்தச் சட்ட திட்டங்களை மீறும் பட்சத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற தண்டனையொன்றுக்கு உள்ளாவதற்கு பரீட்சார்த்திக்கு நேரிடும்.

15. **எழுத்துமூலப் பரீட்சைக்கான பாடத்திட்டம்**:

01. நுண்ணறிவு மற்றும் பொது அறிவு - காலம்: 02 மணித்தியாலங்கள், புள்ளிகள்: 100

**பகுதி 1 – நுண்ணறிவு**

பரீட்சார்த்தியின் தர்க்க ரீதியாக சிந்திக்கும் ஆற்றல், கணித அடிப்படையிலான திறன், கிரகிக்கும் ஆற்றல், தீர்மானம் எடுக்கும் ஆற்றல் என்பவற்றை பரிசோதிப்பதற்கான வினாத்தாள் ஆகும்.

**பகுதி 2 – பொது அறிவு**

இலங்கையின் அண்மைக்கால சமூக, பொருளாதார, அரசியல் ரீதியான தகவல்கள், உலக அரசியல், விஞ்ஞான, தொழில்நுட்ப அறிவு, புதிய விஞ்ஞான கண்டுபிடிப்புகள் முதலானவற்றை நோக்காகக் கொண்ட குறுகிய மற்றும்/ அல்லது பல்தேர்வு வினாக்கள் அடங்கிய வினாத்தாள் ஆகும்.

02. ஆங்கில மொழி - காலம்: 02 மணித்தியாலங்கள், புள்ளிகள்: 100

வாசிப்பு மூலம் புரிந்து கொள்ளல், கருத்துகளை வெளியிடல் மற்றும் தொடர்பாடல் திறன் என்பவற்றை பரிசோதிப்பதற்கான வினாத்தாள் ஆகும்.

03. கணினி விஞ்ஞானம் தொடர்பான அடிப்படை அறிவு - காலம்: 01 மணித்தியாலம், புள்ளிகள்: 100

கணினி தொடர்பான அடிப்படை அறிவு, MS Word, MS Excel போன்ற மென்பொருள்களின் பாவனை, Internet, e-mail பாவனை என்பன தொடர்பில் பரீட்சார்த்தியின் அறிவை பரிசோதிப்பதற்கான வினாத்தாள் ஆகும்.

16. சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய வர்த்தமானி அறிவித்தல்களுக்கிடையில் ஏதேனும் முரண்பாடு அல்லது பொருந்தாத நிலமை காணப்படும் பட்சத்தில் சிங்கள மொழியிலான அறிவித்தலுக்கு அமைய செயற்படுதல் வேண்டும்.

பீ.எம்.டி. நிலூஷா பாலசூரிய,
குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் (ப.க.),
குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்.

"சுஹுருபாயா",
குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்,
பத்தரமுல்லை,
2025, மாச்சு 27.

04-47/1

---

## பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு

### குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் வெளிக்கள/ அலுவலக முறைப்பட்ட – தொகுதி 2 சேவை வகுதியைச் சேர்ந்த அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2025

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் வெளிக்கள/ அலுவலக முறைப்பட்ட – தொகுதி 2 சேவை வகுதியைச் சேர்ந்த அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை 2025, யூலை மாதம் நடாத்தப்படும் என்பது இத்தால் அறியத்தரப்படுகின்றது.

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பத்தை இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் www.donets.lk இணையத்தளத்தில் "Our Services" இன் கீழுள்ள "Online Applications – Recruitment Exams / E.B. Exams" ஊடாக வெளியிடப்பட்டுள்ளதோடு, விண்ணப்பங்களை இணையவழி (Online) மூலம் மாத்திரமே சமர்ப்பிக்க முடியும். இணையவழியில் விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் நடவடிக்கை 2025, ஏப்பிறல் மாதம் 07 ஆம் திகதி மு.ப. 9.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 2025, மே மாதம் 05 ஆம் திகதி இரவு 9.00 மணிக்கு முடிவடையும்.

தற்போது அரசாங்க / மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் விண்ணப்பத்தின் பிரதியொன்றை தனது சுயவிபரக் கோவையில் உள்ளடக்குவதற்காக நிறுவனத் தலைவரிடம் ஒப்படைத்தல் வேண்டுமென்பதோடு, நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் போது நிறுவனத் தலைவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றையும் சேவையை உறுதிப்படுத்தும் கடிதமொன்றையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

1. இந்த அறிவித்தலில் "திணைக்களத் தலைவர்" எனும் பதம் குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் எனப் பொருள்படும். இந்தப் பரீட்சை மூலம், குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதுடன், வேறு விதத்தில் விசேடமாகக் குறிப்பிடப்படாத சந்தர்ப்பங்களில் "பதவி" எனும் பதம் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் தரம் II எனப் பொருள்படும்.

2. இப் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் கடைசித் திகதி 2025.05.05 ஆகும்.

   2.1 எழுத்து மூலப் பரீட்சை: இப்பரீட்சை கீழுள்ளவாறு மூன்று (03) வினாத் தாள்களைக் கொண்டதாகும்.

   i. நுண்ணறிவு மற்றும் பொது அறிவு;
   ii. ஆங்கில மொழி;
   iii. கணினி விஞ்ஞானம் தொடர்பான அடிப்படை அறிவு.